19.4.2015

## ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மீக சிந்தனைகள் - பாகம் 1

**(1)**

பொய்யான தோற்றத்தை அறிவுக்கேற்றது போல் ஏற்பதை மனிதன் விவேகம் என்கிறான். **விவேகம் திரைக்குப் பின் ஊடுருவி காண வல்லது. பகுத்தறிவு விவரங்களை நிர்ணயிக்கிறது. அவற்றை வேறுபடுத்திக் காண்கிறது.** பகுத்தறிவு பிரிக்கிறது, விவேகம் எதிரானதை இணைக்கிறது. சுமுகமான இணைப்பு விவேகத்தின் இலட்சியம்.

---

தோற்றம் பொய்யென மனிதனால் அறிய முடியவில்லை. திருட்டு காவல்காரனின் பணிவான நடத்தை தோற்றம். பொய்யெனத் தெரிவதில்லை. விவேகம் தோற்றமென்ற திரைக்குப் பின்னுள்ள நோக்கத்தையறியும், அது நிலைமையுடன் பொய்யான பணிவை இணைத்துப் பார்க்கும். திருட்டு வெளிவரும் பிரச்சினை விலகும். வியாதி தோற்றம். தோற்றத்தை நம்புபவன் வைத்தியம் செய்கிறான். நான் அன்பன். எனக்கு வியாதி வராது. இது தோற்றம். தோற்றத்தை நம்பாமல், என் நம்பிக்கையை நம்புவேன் எனில் வியாதி சிறுநீரகக் கல் மஞ்சள் காமாலை போல் விலகும். விவேகம் நம்பிக்கையையும், பலனையும் சுமுகமாக இணைக்கும். அறிவு பிரிக்கும், பிரித்ததை முடிவாகக் கருதும். அது பிரச்சினை. விவேகம் பிரிக்காது. பிரிந்ததை சுமுகத்துள் சேர்க்கும். **அது பிரச்சினையைத் தீர்க்கும், சில சமயம் பிரச்சினையை வாய்ப்பாக்கும்.** சர்க்கார் மனையை எடுத்துக் கொண்டு ஆர்டர் போட்டதை அறிவு முடிவாகக் கருதுகிறது. அன்பர் அன்னை தரிசனம் செய்தவர் என்பது பின்னணியில் உள்ள வாய்ப்பு. ஆர்டர் முடிவில்லை, பிரச்சினையை அன்னை தரிசனத்துடன் சுமுகமாக இணைத்தால் ஆர்டர் ரத்தாகும், பெரும் செலவு ஒன்றன்பின் ஒன்றாக இரண்டுள்ளது. ஒரு செலவுக்கே வழியில்லை. அறிவு பிரச்சினையை நம்பிக்கையிலிருந்து பிரிக்கிறது. **பிரித்தது முடிவு. முடிவு முடியாது எனக் கூறுகிறது.** மனம் அதை ஏற்கிறது. பிரச்சினை தீரவில்லை. ஆன்மாவுக்கு விவேகம் உண்டு. விவேகம் பிரிக்காது. இணைக்கும் சுமுகமாக இணைக்கும். "எனக்கு பக்தி நம்பிக்கையுண்டு." அது விவேகத்தின் கண்ணுக்குப் புலப்படும். பிரச்சினையை நம்பிக்கையுடன் இணைத்தால் சுமுகம் எழும். புது வாய்ப்பு எழும். இரண்டு பிரச்சினைகளும் எதிர்பாராதது போல் தீரும். அன்னையை தரிசித்தவர் அன்னையை மறப்பது வழக்கம். **அன்னை மறப்பதில்லை.** அவர் நினைவு எதிர்பாராத வாய்ப்பாக வரும். IAS Special Recruitment வருவதுண்டு. அது 40 வயது வரை உள்ளவர்க்குதவும். ஒரு அன்பருக்காக அன்னை அவர் போன்ற அனைவருக்காகவும் சலுகை வழங்குவது அன்னையின் பிரபஞ்ச அம்சம். பஸ் ஓர் ஊருக்கு ஒருவருக்கு மட்டும் ஓடாது. அனைவருக்கும் உண்டு. அன்னையின் செயல்கள் பிரபஞ்ச செயல்கள் (impersonal, Universal). யாருக்காக வாய்ப்பு வந்ததோ அவர் அறிவைப் பயன்படுத்தினார். இருப்பது 8 இடம். 8 பேரை எடுக்கப் போகிறார்கள். பீஸ் 80/- ரூபாய் மாத சம்பளம். தகப்பனார் மேஸ்த்திரி என்றால் என்ன மார்க் வாங்கினாலும் எடுபடாது. போக வேண்டாம் என முடிவு செய்தார். தான் அன்னை தரிசனம் செய்ததையும் தனக்கு General Knowledgeஇலும் உள்ள பெரும் திறமைகளை மறந்தார். **மேலும் அவருடைய ஆங்கிலப் புலமையின் பெருமையையும் அவர் அறியவில்லை.** பிரச்சினையை 80/-ரூபாய், மேஸ்த்திரி

என நிர்ணயம் செய்தார். பிரித்துப் பகுத்தார். பிரிவினையை ஏற்றார். பரிட்சைக்குப் போகவில்லை. கல்லூரிப் பேராசிரியராக ஓய்வு பெற்றார். அவர் பகுத்தறிவுவாதி. 80/-ரூபாய் ஒரு மாத சம்பளம். இருப்பது 8 இடம். பெற்றோர் நிலை வேலைக்குக் குந்தகம். அவர் பிரித்து பகுத்து நிர்ணயம் செய்தவை அறிவுக்குப் பொருத்தம். **வாழ்வு அறிவால் நடத்தப்படவில்லை**. அறிவு முடிவு தரும் எனில் அவர் எடுத்த முடிவு சரி. நடந்தது என்ன? அவருடன் வேலை செய்தவர் விண்ணப்பித்தார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். General Knowledge லிலும் ஆங்கிலப் புலமையிலும் அவர் மிகவும் பின் தங்கியவர். **இவருக்கு வந்த வாய்ப்பு அவருக்குப் போயிற்று**. அன்னை கொடுத்த வாய்ப்பு என்பதற்கு அடையாளம் எல்லாக் கட்டங்களிலும் தெரிந்தது. அவர் United Nationsக்குப் போனார். இந்திரா காந்திக்கு செக்ரடரியானார். 3 முறை கவர்னரானார். ஜனாதிபதி தேர்தலுக்கு அவரை நியமிக்க விரும்பினார்கள். இது எந்த IAS ஆபீசரும் பெறாத பேறு. அன்னை கொடுத்த வாய்ப்பு என்பதன் முத்திரை. **சென்னை கவர்னராக 50 ஆண்டுகள் கழித்து அவர் வந்த பொழுது அவரை சந்தித்தவர்களிடம் அன்பரைப் பற்றி விசாரித்தார்.** சுமுகம் வாய்ப்பால் எழுவது. நம் திறமைக்கும் வாய்ப்புக்கும் உள்ள சுமுகம் creative படைப்புத் திறனுள்ளது. அன்பர் பரீட்சை எழுதியிருந்தால் நேர்முகத் தேர்வில் மேஸ்த்திரி மகனாக இருந்தும் இவ்வளவு உயரம் அறிவு வளர்ந்ததைப் பாராட்டி, அவர் ஆங்கிலப் புலமையைக் கண்டு வியந்து தேர்ந்தெடுத்திருப்பார்கள். நாட்டின் ஜனாதிபதியாகியிருப்பார். இது ஆன்மாவின் விவேகம் அறிவது. அன்பர் வாழ்வில் உள்ள வாய்ப்பை அன்பரால் அறிய முடிவதில்லை. சந்தர்ப்பத்தால் சேவை செய்ய வேண்டியிருக்கும். அது அவர் குதர்க்க புத்தியைத் தாண்டி தரிசனத்திற்கு அழைக்கும். அவர் போற்றும் அபரிமிதமான செல்வம் தரும். மனிதன் குறையுடையவன். அவன் அறிவு குறையை அறியும். அதையே முடிவாகக் கருதும். **தன் நிறைவை மனிதன் அறிவதில்லை. இல்லாத பெருமையை அறிவான். அது நிறைவில்லை**. தனக்குத் தொந்திரவு விலக ஒருவரை அன்னையிடம் அறிமுகப்படுத்துவதுண்டு. அது எவ்வளவு பெரிய சேவை. அதன் பலன் என்ன என்பதையும் மனிதன் அறிய முடிவதில்லை. தன் பக்தி பிறருக்குப் பலிப்பதைக் கண்டும் நம்பிக்கை எழுவதில்லை. அருகாமையிலிருந்தும் நம்பிக்கை எழுவதில்லை. இதெல்லாம் செய்வது பகுத்தறிவு.

**(2)**

**வாதத்தில் தீவிரவாதியானால் உன்னைக் கண்டு பரிதாபப்பட வேண்டும்.** ஞானம் பரவியுயர்வதை தவற விட்டது உன் பாக்கியம்.

---

வாதம் வென்றால் வாக்கு தோல்வியடையும், லூசி வாதத்தில் முயன்று தோல்வியை நாடினாள். **காரியம் அவளுக்கு வெற்றியாகப் பலித்தது.** பலித்தபின்னும் லுப்டனுக்குப் புரியவில்லை. செயலில் வாதம் ஒரு பகுதி. அடுத்த பகுதி விஷயம், வழக்கு என்போம். தர்க்க ரீதியாகப் பொதுவாக ஒன்று வென்றால், அடுத்தது தோற்கும். நக்கீரன் வாதம் பிரபலம். பீர்பால் அக்பருக்கு இதன் ஓர் அம்சத்தை பெருக்குபவன் வாழ்விலும் மற்றோர் பெரிய அம்சத்தை திருமண வாழ்விலும் எடுத்துக் கூறினார். **நெடுநாளைய பெருவாரியான அனுபவம்**

**வாதத்தை விட்டுக் கொடுக்க முன் வருபவன் வழக்கை ஜெயிப்பான்**. சிதம்பரம் தீட்சிதர்கள் வாதத்தின் வலிமையை அறிந்தவர். சோழனிடம் வெற்றிகரமாகப் பயன்படுத்தினர். அதே வாதம் சோழனுக்கு அவர்களிடம் வெற்றி பெற்றுத் தந்தது. விவேகம் வாதத்தை வலியுறுத்தாது. துர்அதிர்ஷ்டம் வலியுறுத்தும். வெற்றிகரமான வாதத்தின் குணம் மேலும் மேலும் தன்னை வலியுறுத்தச் சொல்லும். அந்த ஆசை காலை வாரி விடும். சர்ச்சிலுக்கு அது பள்ளம் வெட்டியது. இந்த நாகரீகத்தின் சிகரத்தை குறள் எளியவரிடம் தோல்வியை ஏற்கும் மனப்பான்மை சான்றோர்க்குரியது எனக் கூறுகிறது. ஆன்தொனி டிராலப் எழுதிய 47 கதைகளில் அவர் உச்சகட்டமாக உருவாக்கிய பாத்திரம் Pallisar பாலிசர் என்பவர். உழைப்பாளி, உத்தமன், சேவைக்காக மட்டும் செயல்படுபவர். Gentleman to the core. பிரபுவின் பிரபலம் படைத்தவர். அவரைப் பாத்திரமாகப் படைத்து Prime Minister, Dukes Children என்று இரு நாவல்கள் எழுதினார். அவர் எழுத்து சிகரத்தை தொட்ட இடம் இவை. முதல் நூல் பிரபலமடையவில்லை. அடுத்தது எடுபடவில்லை. **அதில் வரும் பெண் கதாபாத்திரம் மேபல்.** அவள் வாழ்வு தனிப்பெரும் சிறப்புடையது. நாட்டில் 4 பேர் பெற்ற Garter பெற்றவர் தகப்பனார். மந்திரி சபையில் நெடுநாளிருந்தவர். சூதாடி, உயர்ந்த இடம். தாழ்ந்த பழக்கம். சுமார் 10 அல்லது 12 பிரபல இளைஞர்கள் பெரும் சொத்து படைத்தவர் மேபலை மணக்க விரும்பினர். அவள் சொத்து முழுவதும் தகப்பனார், சகோதரன் சூதாட்டத்தில் போய் விட்டது. பெண்ணின் அழகு பிரபலமானது. எவரும் அவள் அழகிற்கு ஈடில்லை. அழகு சௌந்தர்யம் – புற அழகு – மட்டுமல்ல. அறிவால் மிளிரும் அழகு அவளுடையது. **21 வயதில் அவளுக்கு 30 வயது நிதானம் உண்டு.** சொத்து கண்முன் அழிவது அவன் மனத்தைத் தொடவில்லை. மாமன் மகன் Treger டிரிகர். இவளுக்கு சமமான அறிவும், வலிமையும், நிதானமும் உடையவன். இளம் வயது நட்பு இனிமையான காதலாயிற்று. இருவருக்கும் பணமில்லாததால் திருமணம் இயலாது. நட்பு உயர்ந்தது, விஸ்வாசம் முழுமையானது. 21ம் வயதில் இருவரும் திருமணம் இயலாது என முடிவெடுக்கின்றனர். மேபல் அவனுக்கு விடுதலை தருகிறாள். அவனை விடுவித்தாள். **அவளால் மனதால் விடுதலை பெற்று அடுத்தவரை கணவனாக ஏற்க மனம் இடம் தரவில்லை.** இந்த நிலையில் சில்வர் பிரிட்ஜ் வருகிறான். இவன் முன்னாள் பிரதமர் முதல் மகன். நாட்டில் அதிக சொத்துள்ளவன். **அவனால் விளையாட்டிற்காகவும் பொய் சொல்ல முடியாது.** மெய் விஷயத்திலும் மேபலுக்கும் கிட்டதட்ட அதே மனநிலை. சில்வர் பிரிட்ஜ் புயலாகப் புரள்பவன். பயங்கர வேகத்திலும் மனம் நிதானமானது. நிலையை இதுவரை இழந்தறியான். மேலும் சில்வர் பிரிட்ஜூம் உறவு. அன்று இங்கிலாந்தில் எந்தப் பெண்ணும் விரும்பும் இளைஞன். இவன் கல்லூரியில் சிறு விஷமம் செய்து வெளிவந்தவன். மனம் விஷமத்திலில்லை. வயதும் சந்தர்ப்பமும் விஷமம் செய்தது. படிப்பு போயிற்று. அதை நஷ்டமாகக் கருத முடியாத பெரு வாழ்வு அவன் அக வாழ்வு. சரியில்லாத நண்பர்களை சரியாக நடத்துபவன். ரேஸில் அவன் வயதினர் £100 பெற்றாலும் இழந்தாலும் உலகம் வியக்கும். £1000 பவுனை அர்த்தமற்றதாக நினைக்கிறான் என்பதால் £70,000 பந்தயத்தில் வந்து, ஏமாற்றப்பட்டு, இழந்தான். நிலைகுலையவில்லை, நஷ்டம் கண்ணிற்குத் தெரியவில்லை, மனத்தைத் தொடவில்லை. **12 பேரை மறுத்த மேபலை அவன் நெருங்கி வந்து உண்மையாக மணக்கும்படி கேட்கிறான்.** வாய்தவறி தகப்பனாரிடம் கூறுகிறான். அவர்

மகிழ்ந்து மலர்ந்து பெண்ணை ஏற்க விரும்பினார். 21 வயது பெண் விவேகம், அறிவு, நிதானம், அழகு, அந்தஸ்து நிரம்பி அனைவரையும் கவருகிறாள். சில்வர் பிரிட்ஜ் பல முறை வந்து பிரியமாகக் கேட்கிறான். **அவளுக்கும் இது பெரிய சந்தர்ப்பம்.** இந்த நேரம் ஓர் அமெரிக்க அழகி வருகிறாள். உலகமே அவளை கண்டு அதிர்ந்து பிரமிக்கிறது. அவள் உள்ளம் புரட்சி வீரம் பெற்றது. உருவம் அழகால் சிறப்படைவதற்கு பதிலாக அழகு அவள் உருவத்தால் உற்சாகம் பெறுகிறது. அனைவரையும் அளவுகடந்து கவரும் அவள் அழகை மேபல் பாராட்டுகிறாள். சில்வர் பிரிட்ஜ் தன் நிலையிழந்து அவளுடன் போகிறான். மேபல் பார்த்து மனத்தால் மறுக்கிறாள். **அவன் அமெரிக்கப் பெண்ணை மணக்க இயலாது என அவள் அறிவாள்.** தன்னை மறந்து அவளுடன் போகும் சில்வர் பிரிட்ஜ் மனம் திருமண விஷயத்தில் மேபலை ஏற்றுக் கொண்டது அசையவில்லை. தன் தகப்பனாருக்கு முன் தலைமுறை மோதிரத்தை மேபலுக்கு பரிசாக அளிக்கிறான். மறுத்தாள், **வாதத்தை ஆரம்பித்தாள்.** வாதம் சரியானது. எல்லாக் கேள்விகளும் கேட்கிறாள். வாதம் ஜெயிக்கும் என அறிவாள். வாதம் முழுவதும் வென்றது. **வழக்கு தோற்றது.** தோற்றபின் அவள் எடுக்கும் பெருமுயற்சி, இழந்ததை அவள் ஏற்கும் மனப்பான்மை, இலக்கிய நயத்தோடு எழுதப்பட்ட நாவலிது. சங்கரர் சென்ற இடமெல்லாம் வாதத்தில் வென்றார். நாடு முழுவதும் அவரை 1000 ஆண்டு ஏற்றது. இது பெரு வெற்றி. தத்துவம் உயர்ந்தால் வாதம் வலுவிழக்கும். இன்று நம் நாட்டில் "மாயப் பிரபஞ்சம்" என்பதைக் கேட்கவும் மனிதரில்லை. வாழ்வை உயர்த்தி பெருமளவில் விரிவுபடுத்தி வாழ்ந்து அனுபவிக்கும் இளைஞர்கள், பெரியவர்கள், 10 A/C, 8 வாட்ச் வைத்துள்ளனர். இவர்கள் வாழ்வில் உயர்ந்த உத்தமர்களில்லை எனினும், அது போன்ற உத்தமர் வாழ்விலும் வாழ்வை அனுபவிக்கும் இந்த அம்சம் உள்ளே வந்து ஆக்ரமித்துக் கொண்டது. வாதம் பெரியது. பெரு விஷயங்களையும் காப்பாற்றவல்லது. என்றாலும் அடிப்படையில் வாதம் வாழ்க்கை மிளிர உதவாது. ஆன்மீக ஞானம் அதற்குரியதல்ல. பகவான் எந்த விஷயத்தையும் சுட்டிக் காட்டுவார். பிருந்தாவனத்தை அவர் சுட்டிக் காட்டுவது "This humours world" இந்த இனிய சுவையுடைய உலகின் நகை முகம் என அவர் கூறும்பொழுது வந்த வழியெல்லாம் திரும்பப் போன வழியெல்லாம் ஞானம் மணிகளாக சிதறிக் காணப்படும்.

**(3)**

**பெரு நூல்களின் சொல் பொய்ப்பதில்லை.** அவற்றிற்கு விளக்கம் எழுதுவதில் இதயமும் அறிவும் தவறுகின்றன.

---

**வேதம் வாழ்வின் சிறுமைகளைத் துறக்க வேண்டும் என்றது. உபநிஷதம் சர்வம் பிரம்மம் என்றது. கீதை சரணாகதியை எடுத்துக் கூறியது. ஏசு மன்னிக்கச் சொன்னார். பகவான் வாழ்வனைத்தும் யோகம் என்றார்.** அறிவில்லாமல் தவறு செய்வது அனைவரும் செய்வது. அறிவைத் தவறு செய்யப் பயன்படுத்துபவன் அயோக்கியன். அறியாமையை அறிவாகக் கொண்டு செய்யும் தவற்றை தீவிரமாக செய்வது பரவலானது. உருவ வழிபாட்டை மறுத்த புத்தர் சிலையை பௌத்தர்கள் வழிபடுவது பௌத்த மதம். ஞானம் பெரியது. என்றாலும் சிறிய மனிதன் பெரிய ஞானத்தைப் பின்பற்றும் வகையில் தத்துவத்தை நடைமுறையாக

மாற்றியமைப்பது ஒரு பெரிய ஆத்மா. அதிலும் தவறு எழுவதுண்டு. தவறு செய்தவன் மனம் மாறினால் அவனை மன்னிப்பது முறை எனில், அவன் மனம் மாறாவிட்டாலும், அவனை மன்னிக்க வேண்டும் என்ற நடைமுறை வந்து விட்டது. வாழ்வைத் துறக்கக் கூடாது, ஏற்க வேண்டும் எனில், **வாழ்வை அப்படியே ஏற்பது தத்துவம் என்பது நம்பிக்கையாகிறது.** அறிவை வற்புறுத்துவது இலட்சியம் என்றால் நக்கீரன் அகந்தையை வற்புறுத்துகிறான். வாழ்வின் மீதுள்ள பாசத்தை அறுக்க 'பற்றறுத்தல்' ஏற்பட்டால் வாழ்வை துறப்பது வழக்கமாகிறது. உடல் முக்கியமில்லை எனில் குளிக்காமல், உடலைக் கவனிக்காமல், தலையில் அழுக்கு சடையாக மாறுவது இலட்சியம் என்பது பெருமானுக்கே சடையன் என்ற பெயர் ஏற்பட்டது. எளிய மனிதனால் எளிய இலட்சியத்தையும் ஏற்க முடியாது. அதனால் அவன் ஏற்க வேண்டியதை தான் ஏற்கும் வகையில் மாற்றிப் புரிந்து கொள்வது, மாற்றி அமைத்துக் கொள்வது அவன் சுபாவம். அமெரிக்கா போனபின் நம் நாட்டிலிருந்தவரை பின்பற்றாத சடங்குகளை அதிதீவிரமாகப் பின்பற்றுவதைக் காண்கிறோம். திருமணம் முக்கியமெனில் திருமணத்தை நடத்துபவர் மணமக்களை விட தங்களைத் திருமணத்தில் முக்கியமாக்கி விழாவைக் கொண்டாடுவதும் உண்டு. சில திருமணங்களில் மணமக்களுடன் பிறந்தவர், **"அப்பாவும், அம்மாவும் தான் புதுத்தம்பதிகளாக இருக்கின்றனர்"** என்று கூறும்படி மணவிழா நடப்பதும் உண்டு. 4 வருஷம் (அல்லது) 6 வருஷம் படித்து அறிவு பெற்றதின் அடையாளமாக பட்டம் கொடுத்தால், படிப்புக்குள்ள முக்கியத்துவத்தை விட பட்டத்திற்கு முக்கியத்துவம் வந்து விடுகிறது. சுலோவேனியா என்ற நாட்டில் ஒரு கம்பனியுண்டு. அவர்கள் தொழில் புத்தகம் அச்சிடுவது. கிருஸ்துவர்கட்கு பைபிள், முஸ்லீம்கட்கு குரான், இந்தியர்க்கு கீதை, கம்யூனிஸ்ட்கட்கு மார்க்ஸ் எழுதிய Capital என்ற நூல் என பலவகையானவர்க்கு பலவகையான பெருநூல்கள் முக்கியத்துவம் பெறுகிறது. அன்பர்கட்கு *சாவித்திரி The Life Divine* போல. இக்கம்பனி இதுபோன்ற நூல்களை சிறப்பான ஆர்டர் பெற்று பெரிய சைஸ் தங்க எழுத்து என்ற விசேஷங்களால் தயாரிக்கிறது. ஒரு பிரதி $20,000 வரை விலையிருக்கும். சமீபத்தில் குரானை 10 அடி உயர பிரதியாக பல சிறப்பு அம்சங்களுடன் அச்சிட்டு ஒரே பிரதியை $200,000க்கு விற்றார். மதக்கோட்பாட்டை விட அதைக் கூறும் நூலுக்கு மரியாதை வருகிறது. அதில் என்ன கூறுகிறார்கள் என்பது பலருக்கு தெரியாமலிருக்கலாம். இது நடைமுறை. அன்னை படமிருந்தால் வீடு அன்பர் வீடாகும் என்ற நம்பிக்கை நம்மிடம் உலவுவதைக் காணலாம். குடுமி, நாமம், பூணூல் மட்டுமே வைதீகம் என்ற நாளிருந்தது. இன்றும் அம்மனநிலைக்குக் குறைவில்லை. பகவான் ஓரிடத்தில் சாதகர்கள் "குருவுக்கு லஞ்சம் கொடுப்பதற்கே விழைகிறார்கள். சாதனையை ஏற்கும் மனநிலையில்லை" என்று எழுதுகிறார். **இம்மனப்பான்மை நாடு முழுவதும் பரவி 'மாவால் செய்வதைப் பூவால் செய்வது' என்ற பழமொழி எழுந்தது.** மனிதன் எப்படியெல்லாம் இலட்சியத்தை விட்டு அகலுகிறான் என்று உணர்ந்த நேரம் பகவான் "என்ன அவனுக்காகக் காத்திருக்கிறது என மனிதனுக்குப் புரிந்து விட்டால் அரைக்கணம் தாமதமில்லாமல் அவன் ஆண்டவனிடம் வருவான்" என்றார். **இலட்சியம் உயிருள்ளது.** கோயில் சிலைக்கு உயிர் உண்டு. **அம்பாள் பேசுவதும் உண்டு.** திரௌபதியின் குரல் மட்டும் கண்ணனுக்குக் கேட்கவில்லை.

மெக்ஸிகோவில் குரல் எழுப்பிய பக்தர் குரலும் அன்னைக்குக் கேட்டது. வராந்தாவில் நின்று வாயைத் திறக்காமல் அன்னையை அழைத்தால் மன்மோகன் சிங் வந்ததும் நிகழ்ந்ததே.

**(4)**

**ஒரு அபிப்பிராயத்தை சரி அல்லது தவறு எனக் கூற முடியாது.**
வாழ்வுக்குப் பயன்படும் அல்லது பயன்படாது எனலாம். **அது காலத்தால் ஏற்பட்டது.** காலப்போக்கில் அதன் பயன் குறைந்து விடுகிறது. **அபிப்பிராயத்தைக் கடந்து உயர்ந்து நெடுநாள் நீடிக்கும் விவேகத்தை நாட வேண்டும்.**

---

அபிப்பிராயங்கள் பலதரப்பட்டவை. நாட்டுக்கு நாடு மாறும் அபிப்பிராயங்கள் உண்டு. காலத்தால் கனியும் அபிப்பிராயமும், மாறும் அபிப்பிராயமும் உண்டு. சிறுவர்கள், பெரியவர்கள் என்பதாலும் ஆண் பெண் என்பதாலும், படித்தவர், படிக்காதவர் என்பதாலும், நகரம் கிராமம் என்பதாலும் அபிப்பிராயங்கள் மாறும். **இன்றைய அபிப்பிராயம் நாளைய எதிரான அபிப்பிராயமாகும். இலக்கியத்துறைக்கே ஏற்பட்ட அபிப்பிராயங்கள் உண்டு.** அதுபோல் அரசியல், நாடகம், சினிமா, பத்திரிகைத் துறைகளுக்கென ஏற்பட்ட அபிப்பிராயங்கள் உண்டு. அவசரப்படுவது தவறு என்றொரு அபிப்பிராயம் உண்டு. அவசரப்படாமலிருப்பது தவறு என்ற அபிப்பிராயம் எழும் நேரம் உண்டு. சாப்பிடும் பொழுது பேசக்கூடாது என்பது நம் அபிப்பிராயம். பேசும் பொழுது சாப்பிடுவதே சாப்பிடுவது என்பது மேல்நாட்டு அபிப்பிராயம். தகப்பனார் பேச்சைத் தட்டக்கூடாது என்பது பெரிய வலுவான அபிப்பிராயம். மேற்படிப்பிற்குப் போக வேண்டாம், அமெரிக்கா போவது தவறு, கலப்பு திருமணம் உதவாது, அரசியல் தவறு, உள்ளதை சொல்லக்கூடாது என்று தகப்பனார் கூறும் பொழுது தகப்பனார் பேச்சை மறுப்பது சரி என்று உலகம் அபிப்பிராயம் கூறும். எழுதுவது, ஏர் ஓட்டுவது, கொழுக்கட்டை சமைப்பது, ஆகியவை திறமைகள் (skills). ஏர் ஓட்டுவது என்ற திறமை டிராக்டர் வந்தபிறகு பயன்படாது. எழுதுவது என்ற திறமை கம்ப்யூட்டர் வந்தபிறகு ஏராளமாக அதன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது. கொழுக்கட்டை செய்வது பெரும் திறமையாக இருந்தது ஒரு காலம். இன்று அத்திறமை பயன்படாது. **திறமைகள் முக்கியத்துவத்தை இழக்கின்றன**. திறமை சரியா, தவறா என்பது பிரச்சினையில்லை. அதே போல் ஒரு அபிப்பிராயம் ஒரு காலத்தில் பயன்பட்டது. காலம் மாறியபின் அதற்குப் பயனில்லை. வில் வித்தை, மல்யுத்தம் தம் பெருமையை இழந்தன. அரசனுக்கு வாக்கு ஆண்டவன் வாக்காக இருந்தது. இன்று அந்த அபிப்பிராயம் மாறி விட்டது. உலகில் மன்னிக்க முடியாத குற்றமேயில்லை. **நகைமுகம் உலகம் படைத்துள்ளது.** மனிதனுடைய பார்வை குறையானது. குறை உலகிலில்லை. பார்வையை மாற்றினால் ஜடம் மறையும். பெண் பேய் என நினைப்பது பெண்ணில்லை. அவளுடைய அற்புதமான நிலையை அறியாத மனம் நினைப்பது. வாழ்வு பயங்கரமானதல்ல. **வாழ்வு சிறியது, வளர்கலை பெரியது என வளரும் கலையான பரிணாமம் வர்ணிக்கப்பட்டது.** சிருஷ்டி பரிணாமமாக மாறும் பொழுது கலை வளர்ந்து பிரபஞ்சம் அழியும் நேரம் உண்டு. அதைப் பிரளயம் என்கிறோம். **பிரளயம் வந்தபின்னும் இருப்பது வாழ்வு.** மனம் கோணலானது என்றனர். கோணல் மனத்திலில்லை. நம் பார்வையில் உள்ளது. எப்படி மனம் உற்பத்தியாயிற்று, என்ன

காரணத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டது என்று அறிந்தால் குதர்க்கம் மனத்திலில்லை. நாம் அதையறிவதில் உள்ளது என்று பகவான் கூறுகிறார். துன்பத்தை நாம் பாவம் செய்து அனுபவிக்கிறோம் என நினைக்கிறோம். **ஜீவியம் இருளில் புதைந்து வெளிவர முயலும் பொழுது நாம் அதைத் துன்பமாக அறிகிறோம் என்கிறார் பகவான்.** பகவான் சிருஷ்டிக்கு வெளியிலிருந்து சிருஷ்டியைக் காண்பதால் அவருக்கு இவை தெரிகின்றன. உபநிஷதங்களும், வேத ரிஷிகளும் கூறியவை மேற்கண்டவை என்றாலும், அவர்கள் அடுத்த பக்க உண்மையைக் காணாமலில்லை. இரண்டு பக்கமும் தெரிந்தாலும் அவர்கள் ஒரு பக்கத்தையே கருதினர். நாம் இன்று புறக்கணிப்பது நாளை வலுவாக மீண்டும் வந்தால் அதை நாம் புறக்கணித்தது தவறு என்று அறிய வேண்டும். பரம்பொருளை ஏற்று ஜடத்தை மறுத்தாலும், ஜடத்தை ஏற்றுப் பரம்பொருளை மறுத்தாலும் **சிருஷ்டியின் அடிப்படையான உண்மையெனும் ஐக்கியம் விலகுகிறது.** ஐக்கியத்தைப் போற்றினால் அதிகபட்ச உண்மை தெரியும். இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தால் முழுமையில்லை. குறை எழும். இரண்டையும் ஏற்கும் பொழுது நாம் காண்பது பரம்பொருள். உலகமே அப்பரம்பொருளாலானது. நம் பார்வை சுருங்கி ரூபத்தை மட்டும் ஏற்றால் பேருண்மை விட்டுப் போகும். ரூபத்தைக் கடந்த விஷயத்தை ஏற்று சிருஷ்டியை மட்டும் கருதுவதற்கு பதிலாக சிருஷ்டியையும் பரிணாமத்தையும் கருதினால் பகுதியை ஏற்காமல் வேதம் உணர்ந்த ஐக்கியத்தை சத்திய ஜீவியத்திலும் உணர்ந்தால் குறைந்த பட்சம் அதிகபட்சமாகும். பகுதி முழுமையாகும், ஜடம் பரம்பொருளாகும், மனிதன் இறைவனாவான், ஜடத்திற்கும் ஜீவியம் உண்டு எனத் தெரியும். சச்சிதானந்த பிரம்மத்தை தவத்தால் உயர்ந்து மனிதன் எட்டினான். சச்சிதானந்தம் அருளாகவும் பேரருளாகவும் பொருள்களில் தன் ஆனந்தம் வளர்ந்து வெளிவர முயல்வதைக் கண்டு, **ஜடம் ஆனந்தமய ஜீவன் Matter is being of Delight எனக் காணலாம்.**

**(5)**

**அபிப்பிராயத்தை ஏற்கும் அறிவிலியாகாமலிருக்க எண்ணம் எந்த அம்சத்தில் சரி எனக் கண்டு,**
**அதன் நேர் எதிரானது எங்கு உண்மை எனக் கண்டு இம்மாறுதலுக்குரிய காரணத்தை அறிந்தால், இறைவனின் சுமுகம் எழும்.**

---

மனிதன் நடக்கும் நிகழ்ச்சிகளை அவன் அறிவுக்குட்பட்ட அளவில் புரிந்து கொள்கிறான். வாழ்க்கை அளவோடு திட்டமிட்டதாய் நடக்கும்பொழுது இது சரி, பரீட்சைக்கு பெரும்பாடு பட்டுப் படித்தேன், முதல் மார்க் வந்தது என்பது தெளிவு. எலக்ஷனில் பெருந்தலைவரை எதிர்த்து நின்றேன். தோற்றேன். திருமண வயது வந்தபின் பணமும் அழகுமிருப்பதால் எளிதில் மணம் முடிந்து விட்டது. இல்லாததால் வரனே வரவில்லை என்பது போல் ஏராளமான நிகழ்ச்சிகள் இயல்பாக நடக்கின்றன. சாப்பாட்டு வசதியற்ற குருக்கள் பெண்கள் வசதியாக வாழ முடியாது. சவுக்கு மட்டும் பயிராகும் நிலம் அந்த நாளில் மார்க்கட் விலைக்குப் போவதற்கு பெருமுயற்சி வேண்டும். முயற்சி பலிக்கும் எனக் கூற முடியாது. என் நிலத்தை சுற்றி போர் கிணறு போட்டவர்கட்கு ஆரம்ப முயற்சி எல்லாம் தோற்று விட்டது. நானோ

அதிர்ஷ்டக்கட்டை. நான் எளிதில் வெற்றி பெற முடியுமா? எங்கள் வீட்டில் எவருக்கும் படிப்பு வரவில்லை. எனக்கு மட்டும் எப்படி டிகிரி எடுக்க முடியும்? **Mr.பென்னெட் பெண்கள் இராணுவ ஆபீசர்களை எதிர்பார்த்து ஏமாந்தவர்கள். அதனால் 23 வயது வரை பெண்ணுக்கு வரன் வரவில்லை. "நானும் இப்பெரிய ஸ்தாபனத்தில்** முக்கிய பதவியில் இருக்கிறேன். பல புத்தகம் வெளியிட்டிருக்கிறேன். வசதியான பலர் வந்து என்னை சந்திக்கிறார்கள். ஆனால் எவரும் புது நூல் வெளியிட பண உதவி கேட்டால் நடக்கவில்லை" என்பன போன்றவற்றை அடுக்கலாம். பகவான் இரு பக்கங்களையும் கண்டு, அவற்றை சுமுகமாக இணைத்தால் இறைவனின் திருவுள்ளம் தெரியும் என்கிறார். மனிதன் தன் அபிப்பிராயமே முடிவு என்று நினைக்கிறான். அதன் பலனை பெறுகிறான். அதைக்கடந்த அடுத்த பக்கம் உண்டு. வாழ்வு அங்குள்ளது. அது மனித அஞ்ஞானத்தின் மறுபுறம் **ஆண்டவன் சுமுகம் எழுந்து பலன் தரும் நிலையது என்பதை மனம் அறியவில்லை.** மேலே சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டேன். அவை எப்படி மலர்ந்தன என்பதை விளக்க எந்த உயர்நிலையிலிருந்து பெரும்பாலான பலன் வந்தது என்பதைக் குறிப்பிடுகிறேன். காலம் மாறினால் அதுவும் உயர்ந்தால் அந்நிலை எழும். உலகில் நாம் செயல்படும் துறை பரவும் நேரமானாலும் அந்த உயர்நிலை மனித அறிவுக்குப் பலனாக எழுந்து முன் வரும். தொழில் நாட்டில் பரவும் நேரம் பாங்கு உதவ முன் வரும். நம் நிலம் உள்ள இடத்தில் ரோடு வரப்போவது நமக்குத் தெரிந்தபின் நிலம் விலை போவது நமக்கு தெரியாவிட்டாலும் சூட்சுமமானவர்க்கு அச்சூசகங்கள் மனதில் படும். பிரான்சில் புரட்சி நடந்தால் இங்கிலாந்தில் உள்ள பணக்காரர்கட்கு ஆபத்து என விளங்கும். அதனால் அதிர்ஷ்டம் வரும் எனப் புரியும் அறிவு நமக்கில்லை. பக்கத்து வீட்டுக்காரரிடம் மரியாதையாகப் பழகி மனத்தால் துரோகமிழைத்ததால் பலன் அவரால் நமக்கு வரும் என அறிவிலி நம்புவான். அறிவுள்ளவன் "யார் மூலம் எனக்கு வசதி வந்தாலும் பக்கத்து வீட்டுக்காரரால் வராது" என அறிவான். வாழ்வு மலரும்பொழுது நாட்டிற்கு சுதந்திரம் வந்தபின், பெண் உரிமையை ஏற்று உலகம் ஏற்றபின் முதலாளி அடக்குமுறையை கைவிட்டபின், நிலைமை சாதகமாக அனைவருக்கும் மாறுவது மாறியபின்னும் தெரியாது. **பகவான் கூறுவதுபோல் இருபுறமும் சோதனை செய்தால், நிலைமையுயர்ந்து நல்லது எழும் அது ஆண்டவன் சுமுகம்**. பக்கத்து வீடு மனிதர் அன்னை பக்தர்கள். எங்கள் குடும்பம் பரம்பரையாக பக்தியுள்ளவர்கள். அதனால் புதுநிலை எழும் என்பது குருக்கள் வீட்டார் அறியாதது. **அவர்கள் அறியாத அப்புது நிலை – அன்னை அளிப்பது – ஆராய்ச்சியையும் அவர்கட்காக செய்து பலன் தந்தது.** கெட்ட எண்ணத்தை செயல்படுத்தும் பொழுது அதை விட ஆழமாகப் புதைந்துள்ள நல்ல எண்ணம் எழுந்து தரிசனத்திற்கு அழைத்துப் போய் நல்ல பலனைத் தந்தது. பிரெஞ்சுப் புரட்சியை அறியாத பென்னட் பெண்கட்கு அது பலனளித்தது. அதிர்ஷ்டக்கட்டையானாலும் கடைக்கு சரக்கு வாங்க அடிக்கடி புதுவை போகும் பாக்கியத்தை அவர் அறியாவிட்டாலும் அது பலன் அளித்து பாஸாக முடியாத பையன் நான்கு பாடங்களில் முதல் மார்க் வாங்கும் திறமையுடையவன் என்று தெரிய வந்தது. அத்திறமை நேரம் வரும்பொழுது எழுந்து வந்து திருவுள்ளத்தைச் செயல்படுத்தும். மணம் செய்ய பணமில்லாவிட்டாலும் வேலை செய்யுமிடம் அன்னைக்குரிய இடம் என்பதால், அதிர்ஷ்டம் எழும் வாய்ப்பு அது. நம் குறைகள் நமக்கு தெரியும் நம் அபிப்பிராயம் நம் குறையை வற்புறுத்தி அதற்குரிய பலனைத் தரும். **குறை**

**நிறையின் மறுபுறம்.** மனம் மறுபுறத்தை நாடினால் குறை தடம் புரண்டு நிறையாகும். நிறைக்கு நேரம் வந்தால் இறைவன் செயல்படுவார். அது திருவுள்ளம்.

**(6)**

**துன்பம் எவ்வளவு இறுதி இன்பத்திற்கு அவசியம், தோல்வி எவ்வளவு இறுதி வெற்றிக்கு அவசியம் என்பதை புரிந்து கொண்டால், ஆண்டவன் செயல்படும் வகை ஓரளவுக்குப் புரியும்.**

---

திருமணமாகாத பெண்ணுக்கு திருமணம் அவசியம் என நாம் நினைப்பது தவறல்ல. அவள் வீட்டு நிலைமையில் அவள் மனம் எப்படியிருக்கிறது, எதைத் தேடுகிறது, **எதன் மூலம் தேடுகிறது, ஆண்டவன் அவளுக்கு என்ன அளிக்கிறான் என்பது நமக்குத் தெரிவதில்லை.** கிரிஷ்ண தன்கோஷ் தன் மகனுக்கு ICS வேண்டும் என நினைத்தார். பகவான் ஸ்ரீ அரவிந்தர் மனத்தில் காவியமிருந்தது. அது பிரபஞ்ச காவியம், மந்திரத்தின் மூலம் அறிய வேண்டும் என்பது அன்று அவருக்கோ அவரையறிந்தவர்க்கோ தெரியாது. வேலை செய்பவளுக்கு சாப்பாடு வேண்டும் என அவளுக்கும், மற்றவர்க்கும் தெரியும். **அவள் உடலில் என்ன வியாதியிருக்கிறது. இது போக அவளுக்குப் பட்டினியுடன் வேலை செய்ய வேண்டும் என அவளுக்கோ அவளைக் கண்டு பரிதாபப்படுவர்க்கோ தெரியாது.** மனிதனுடைய பார்வை கண்பார்வை. கண் பார்க்கும், கண் பார்த்ததை மனம் புரிந்து கொள்ளும். புரிந்து கொள்ள மேலும் ஒரு நிலையுண்டு. அது ஆத்மா. B.A. பரீட்சை எழுத விரும்பும் தமிழ் பண்டிட் விரும்புவது B.A. எனத் தெரிகிறது. 20 வருஷமாக ரிஜிஸ்டரில் பியூனுக்கு முன் எழுதப்பட்ட அவர் பெயர் அங்கிருந்து உயர வேண்டும் என அவர் நினைப்பதை மற்றவர் அறிவதில்லை. தன் படிப்பில் பாதியும் பெறாத இதர ஆசிரியர்கட்கு ஆங்கில அறிவால் ஏற்படும் மரியாதையை அவர் விரும்புவதை எவரும் அறிவதில்லை. **அதையும் கடந்த சட்டங்கள் உண்டு,** மனிதன் வசதி தேடுவது உண்மை. அதையும் கடந்து தேடுவது மரியாதை. **மரியாதையை தேடுவது உணர்ச்சி.** உடல் அதைக் கடந்தது. உடல் தேடுவது வலிமை. வலிமை அதிகாரத்தைக் காட்டும். பிறரை அழிக்கும் வலிமையுள்ள அதிகாரம் தேடுவது மனித உறவு. **அடுத்தவரை அழிக்க முடியாவிட்டால், உதவி செய்பவர், உறவாடுபவரை, இவனுக்கு வேலை போய் நடுத்தெருவில் நிற்க வேண்டும். என்னை வந்து கெஞ்ச வேண்டும் என மனித மனம் நினைக்கிறது** என்பதை சொல்ல முடியாது, சொன்னால் எவரும் கேட்டுக் கொள்ள மாட்டார்கள். இந்த அம்சத்தை தன் மகனிடம் பெற்றோரிடம், உற்ற நண்பரிடம் கண்டவர்க்கு உலகத்து மேல் வெறுப்பு எழும். அந்த வெறுப்பு எழாதவர் நாகரீகமானவர். மனம் நயத்தக்க நாகரீகம் தேடினால் நண்பர் விஷம் பரிமாறுவார் என்பது குறள். வயது 60க்கு மேலானால், அனுபவம் 100 அல்லது 200 ஆனால் சற்று கவனமாக சிந்தித்தால் இத்தனையும் பாரதத்திலிருப்பதைக் காணலாம். **அதைக் காண நுணுக்கம் தேவை.** வாழ்வில் யோகம் என்பது இதனையும் கண்டபின் நாகரீகமாக, நயமான பண்புடன் நடப்பது. ஆண்டவன் செயல், திருவுள்ளம் என்பது என்ன என்று தெரியும் மார்க்கம் இவை. கால் இடுப்பு வரை அளவுகடந்து வீங்கியபின் வீக்கம் வடியும் மருந்தில்லை. அப்படியொரு மருந்து இருந்து வைத்தியம் செய்து

குணமாக பெருவசதி தேவை. வசதியுள்ளவர்க்கு அது வாராது. பட்டினி கிடப்பவருக்கே அது வரும். **அன்பருக்கு, அன்னை சூழலிலிருப்பவர்க்கு எதற்கும் வழியுண்டு.** இருக்கும் வழி மூலம் அன்னை சிரமத்தைத் தீர்ப்பதை உலகம் துன்பம் என அறிவது மக்களுடைய அறியாமை. நாள் முழுவதும் கடுமையாக உழைத்தவனுக்கு மது மாலையில் இதமாக உறக்கம் தருகிறது. இதில் அவசியம் உண்டு, தவறு இல்லை. பகவான் கனவில் சன்னியாசி சூலம் கொடுத்த பின்னும் பகவான் ICSயை விட்ட பின்னும் அவர் மனம் சுதந்திரத்தை நாடியது. **சுதந்திர நாட்டம் பெற வேண்டிய துன்பம் அவதார புருஷன் என்பதால் பிரபஞ்ச இருளை அழித்து விஸ்வரூப தரிசனத்தில் தீமையற்ற நன்மையைக் காட்டியது.** காளிங்க நர்த்தனம், சிசுபாலனைக் கொன்றது, கம்ச வதம், துரியோதனாதிகள் பூண்டோடு அழிந்தது ஆகியவை துன்பமாகத் தெரிந்தால் சத்திய ஜீவிய திருஷ்டியில் அவை புனிதமான இன்பமாகத் தெரியும். நம்மால் அவற்றில் ஒன்றையாவது நம் அனுபவங்களில் காண முடியும். அது 'திரிகால திருஷ்டி'. போர் முனையில் நிகழும் செயல்கள், ஊர் பிரண்டு உற்றாரை அழிப்பவை தெய்வச் செயல் என அறிய நம் பார்வை சத்திய ஜீவிய திருஷ்டி **திரிகால திருஷ்டியாக** வேண்டும். தத்துவத்தை விளக்கினால் அது தர்க்கமாக இருக்காது. குதர்க்கமாக இருக்கும். பொறுமை அஞ்ஞானத்தை ஞானமாக மாற்றும். மனிதன் செடல் குத்திக் கொள்கிறான். தீ மிதிக்கிறான். பூரி ஜகன்நாத்தில் தேரடியில் வீழ்ந்து மடிகிறான்.இவை அவன் தேடும் இன்பம் என்பது ஆன்மீக ஞானம். *ஆவீன மழை பொழிய அகத்தினள் மெய் நோவ சாவோலை கொண்டு ஒருவன்* எதிரே வருவதைத் தமிழ் செய்யுள் கூறுகிறது. **இவை பெருவெற்றியை நாடும் எலக்ஷனுக்கு முன் இரவு பகலாய் வேலை செய்பவர் மேதை எனப் பட்டம் பெறுபவன் இரவு பகலாய் படிப்பது என அறிய அனுபவம் ஆன்மீகமாக ஏற்க வேண்டும்.** 27ஐ தேடித் பெறாதவர் 81 பெற்றபின் முதலாக நினைப்பது "போதும் போதும், இனிமேல் வேண்டாம்" எனக் கருதி அதைப் பெற்று தருபவரைத் திட்டுவார் என்பது ஆன்மீக விவேகம். சத்பிரேமுக்கு உள்ள அம்சம் அன்னை கண்ணில் பட்டு, அதை பகவான் ஆமோதித்து, 20 ஆண்டு அன்னை முயற்சியால் அவர் Sri Aurobindo or The Adventure of Consciousness எழுதியபொழுது அவர் உடல் எரிய ஆரம்பித்தது உடலின் ஏற்புத்திறன். ஒருவர் தேடுவது அவருக்கே தெரியாத பொழுது அடுத்தவர்க்கு எப்படித் தெரியும்? என் பக்தியால் என் தாயார் செய்ய மறுத்ததை நான் பெற வேண்டும் என பெண் நினைப்பது அவளுக்கோ பிறருக்கோ தெரியாது. எவனாவது என் கையில் மாட்டினால் அவனை அழித்து சமாதி கட்டி மறு வேலை பார்க்கிறேன் என்பவர் அதையறியாமல், அறிந்தால் வெளியிட முடியாமல் B.A. படிக்க முனைவது உலகம் காணும் நிகழ்ச்சி. எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான் என்பவன் குருவுக்கு ஞானம் தர வந்த சிஷ்யன் தோற்றேன் என்றபொழுது வென்றேன் என்பது ஞானம். ஒருவருக்கு இந்த ஞானம் வந்தபின் அவரால் இந்த ஞானம் செயலில் பொறுமையாக வெளிப்படுமாறு இருக்க முடியுமானால், அவர் பார்வை, அவர் சூழல் அன்னையின் ஆன்மீகச் சூழல். அதில் பிரச்சினை தடம் மாறி திருவுருமாறி ஆன்மீக வாய்ப்பாகும். மீரா பெற்ற விஷம் அவள் பெற்ற மோட்சம். சீராளனைக் கறி சமைத்ததால் தாயார், தந்தை மகனுக்கு மோட்சம் கிடைத்தது. அது இறைவன் திருவுள்ளம். **அன்பர் சொந்த வாழ்வில் அரெஸ்ட் வாரண்ட்**

**பெற்று, அரசியல் செல்வாக்கடைந்து, அகில இந்தியாவில் தொழில் நடத்தினார் என்பது ஓர் அன்பர் அனுபவம்.**